கொண்டு வீட்டில் உள்ள தாய்மார்களேயும், குழந்தைகளேயும், எங்களேயும் தாக்கிய காட்சியை கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதை நாங்கள் மறந்துவிடவில்லை. கனம் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த நேரத்தில்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது. அந்தச் சம்பவத்திற்காகத்தான் இப்பொழுது இப்படி நடக்கிறது என்று நீங்கள் நினைக்கத் தேவையில்லை. பழிக்குப் பழி வாங்கும் முயற்சியில் நாங்கள் நடந்துகொள்ளவில்லை. போலீசார் இரண்டு தரப்பு வழக்குகளேயும் விசாரித்து, உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, முன்னால் அப்படி நடந்தது என்பதற்காகத்தான் இப்பொழுது இப்படி நடைபெறுகிறதா? பழிக்குப் பழி என்றுதான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன விஷயங்களில் இன்னின்னவாறு நடந்துகொள்வோம் என்று எடுத்துக் காட்டுவதைப்போல உங்களுடைய நடவடிக்கைகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது அப்படி நடந்தது என்பதை எடுத்துக்காட்டினார். அப்பொழுது நடந்த சம்பவத்திற்குப் பதிலாகத்தான் இப்பொழுது இம்மாதிரியான காரியங்கள் நடக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்பொழுது அப்படி நடந்ததற்காக இப்பொழுது அப்படி நடக்கவில்லை. பத்திரிகைகளில் செய்தி வருவதற்காகத்தான் 'அப்பொழுது அப்படி நடந்தது என்பதற்காக இப்பொழுது இப்படி நடைபெறுகிறதா?' என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்கள். இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அம்மாதிரியான தவறுகள் எங்கள் ஆட்சியில் நடக்கவிட மாட்டோம் என்பதை நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

காவல் துறையினர் இரண்டு தரப்பினர் வழக்குகளேயும் விசாரித்து நியாயம் அளிப்பார்கள். தேவையானவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சந்தேகப்படக் கூடாது. சந்தேகம் என்பது ஒரு பெரிய நோய்.

யூகலிப்டஸ் எண்ணெய் உற்பத்தி.

*19 வினா—திரு. எம். பூபதி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் யூகலிப்டஸ் எண்ணெய்த் தயாரிப்புத் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் தயாரிக்கப்படும் யூகலிப்டஸ் எண்ணெயின் மொத்த அளவு என்ன?

1970 நவம்பர் 26]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஒன்று.

(இ) சுமார் 3,000 கிலோ யூகலிப்டஸ் எண்ணெய் ஆண்டு தோறும் தயாரிக்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, யூகலிப்டஸ் எண்ணெய் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறதா? இதன்விளைவாக அரசுக்கு என்ன லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த யூகலிப்டஸ் அடுத்த மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 250 இடங்களில் குடிசைத் தொழிலாக, கற்பூர இலையை ஏலத்தில் எடுத்துக் கொண்டு வந்து எண்ணெய் தயார் செய்கிறார்கள். தனியார் துறைகளிலும் அரசாங்கத் துறையிலும் இதைச் செய்கிறார்கள். எவ்வளவு என்ற கணக்குவிவரம் என்னிடம் தற்போது இல்லை.

திரு. சோ. கருணாநாதன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நீலகிரித் தைலம் பெருவாரியான குடும்பங்களில் வாங்குகிறார்கள். அப்படியே நகர்ப்புற மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் வசதியாகக் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்போது போதுமான அளவிற்கு, சுமார் 3 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் அரசாங்கத் தொழிற்சாலை மூலமாகவும், 85 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் குடிசைத் தொழில் மூலமாகவும் சேகரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் சுலபமாக எங்கும் கிடைக்கிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையம்.

*20 வினு—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலைகள் எப்போது பூர்த்தி அடையும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கால்பாக்கம் அணு மின் நிலையத்தின் முதற் பிரிவு (200 மெ.வா. உற்பத்தித் திறன்) வேலைகள் 1974–75-ல் முடிவடையும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, 1974-75-ல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதற்பிரிவு வேலைகள் முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் 200 மெகவாட் மின்சார உற்பத்தித் திறன் வேலைகளை விரைவில் முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?